செய்தி வெளியீடு எண். 74 நாள்: 02.02.2018

**வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களின் ஆட்சேபணை / கருத்துக்களை நேரடியாக கேட்பதற்கான மண்டல அளவிலான கூட்டம் மறுவரையறை ஆணையத் தலைவரும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு.எம்.மாலிக் பெராஸ்கான்,இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக வெளியிடப்பட்ட வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களின் ஆட்சேபணை / கருத்துக்களை நேரடியாக கேட்பதற்கான மண்டல அளவிலான கூட்டம் மறுவரையறை ஆணையத் தலைவரும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு.எம்.மாலிக் பெராஸ்கான்,இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளிலும், மாவட்ட அளவிலும் வெளியிடப்பட்டு, அக்கருத்துருக்களின் மீது அரசியல் கட்சிகள் / பொது மக்களின் ஆட்சேபணை / கருத்துக்கள் தொடர்பான மனுக்கள் 12.01.2018 அன்று வரை பெறப்பட்டன.

அரசியல் கட்சிகள் பிரதிநிதிகள் / பொது மக்கள் இக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு ஆட்சேபணை / கருத்துக்களை நேரடியாக தெரிவித்தனர். அவர்களுடைய கருத்துக்களை கேட்டறிந்து அவற்றின் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மறுவரையறை ஆணையத் தலைவரான தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு மறுவரையறை ஆணையத் தலைவரிடம் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் கட்சி பிரதிநிதிகள் / பொதுமக்கள் 45 மனுக்கள் அளித்துள்ளனர்.

12.01.2018 அன்று வரை பெறப்பட்ட ஆட்சேபணை / கருத்துக்கள் மனுக்களில் 403 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மறுவரையறை ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டன. மீதமுள்ள 514 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட உள்ளன. மேற்படி மனுக்களை பரிசீலனை செய்து ஒருவார காலத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மறுவரையறை ஆணையத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்ப வேண்டுமென மாநில தேர்தல் ஆணையர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மறுவரையறை ஆணையத்தின் உறுப்பினர்களான நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கோ.பிரகாஷ்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் இயக்குநர் திரு.கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.சு.பழனிச்சாமி,இ.ஆ.ப., மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட மறுவரையறை அதிகாரி திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**